(இ) எதிர்பாராச் செலவு நிதி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1982

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு: தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (மூன்றாவது திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(முற்பகல் 11.10)

3. தகவல் கோரல்.

பத்திரிகை நிருபர்கள் கறுப்புச்சின்னம் அணிந்திருப்பது

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த அவையில் நடைபெறுகின்ற எந்த நிகழ்ச்சியானாலும் அதைச் சபைக்குத் தெரிவிப்பதுதான் நாம் வழக்கமாக கடைபிடித்து வருகிற முறை. இன்றையதினம் 'பிரஸ் ரிப்போர்ட்டர்ஸ்' கறுப்புச் சின்னம் அணிந்து வந்திருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, பிரஸ் ரிப்போர்ட்டர்ஸ் தங்களுடைய அனுமதியின் கீழ் வருகிறார்கள். தமிழ்நாடு அரசாங்கம் பத்திரிகை சுதந்திரத்தை அடக்குவதற்கு சட்டம் கொண்டு வந்து, அதை நிறைவேற்றுவது கண்டிக்கிற வகையில் இருக்கிறது என்று பத்திரிகையிலே படித்திருக்கிறோம். அது உண்மைதானா? அவர்களுக்கு என்ன குறை இருக்கிறது என்பதைக் கேட்டு அவைக்குத் தெரிவிக்க வேண்டிய கடமை உங்களுக்கு இருக்கிறது. ஏதாவது குறைகள் இருக்கிறதா என்பதைக் கேட்டு அரசாங்கத் தரப்பிலே ஸ்டேட்மென்ட் வைத்தாலும் வைக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகை நிருபர்கள் சபையில் பத்திரிகைக் குறிப்புகளை எடுக்கிறவர்களே தவிர அவர்கள் சபையின் அங்கமாக இல்லை. அவர்களுக்கு இருக்கிற குறை பற்றி உறுப்பினர்கள்தான் தெரிந்து கொள்ள வேண்டும்.

திரு ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, பத்திரிகையின் நிருபர்கள் அவையின் அங்கத்தினர் அல்ல; எலெக்டட் மெம்பர்ஸ் தான் இங்கே வரமுடியும். அவையினுடைய நடவடிக்கைகளைப் பொறுத்தவரைக்கும் தமிழ்நாடு முழுவதும் அனுப்புவதற்கு 'மெயின் இன்ஸ்ருமென்ட்' பிரஸ். அவர்களுக்கு 'கிரிவன்ஸ்' இருக்கிறது என்கிறபோது அவற்றை ரிசால்வ் செய்வது இந்த அவையினுடைய கடமை. உங்களுடைய கவனத்திற்கு வரவில்லை என்றாலும் எங்களுக்குத் தெரிய வந்ததை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே நடந்து முடிந்தஒரு பிரச்னை அது தீர்மானிக்பட்டு அமலாக்கப்பட்டிருக்கிறது. அது செயல்பட்டுக் கொண்டிருக்கிறதா? ஏன் செயல்படுகிறது? எபபடி செயல்படுகிறது? என்பதெல்லாம் வழக்கு மன்றம் வரையில் கூட சென்று விட்ட ஒன்று. அது குறித்து சபாநாயகரோ அல்லது அங்கத்தினர்களோ விளக்கம் பெறவேண்டுமென்று விரும்பினார்களானால் அதைத் தனியாக ஏதாலது ஒரு வகையில் கொண்டு வருவதுதான் சரியாக இருக்குமே தவிர, இப்படி சந்தேகத்தைக் கிளப்பி, அது எதற்காக, ஏன் என்று தெரியாதது போல் கேட்டு அதைக் குறிப்பேட்டிலே கொண்டுவர முயற்சிப்பது சரிதானா என்பதை நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: அரசாங்கம் அதை இப்போது வேண்டுமானாலும் 'வித்-டிரா' பண்ணிக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே இந்தச் சபையிலே இந்த மசோதா வந்து நிறைவேறி நடைமுறைக்கு வந்திருக்கிற மசோதா. இதிலே திருப்தி, அதிருப்தி என்பது வேறு விவகாரம். அதைத் தனிப்பட்ட ஒரு முறையில் கொண்டு வந்து விவாதித்தால் அதை விவாதிக்கத், தயாராக இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அதுபற்றி பிரச்சினையில்லை.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, அது பாஸ் பண்ணப்பட்டது என்பது ஒரு பாயிண்ட். அதிலே எதுவும் குறுக்கே நிற்காது. ஒரு ஸ்டேஜிலே நாடு பூராவும் அதை எடுக்க வேண்டுமென்று கூறுகிற போது அரசாங்கம் அதை வித்-டிரா பண்ணுவதிலே எதுவும் குறுக்கே நிற்கவில்லை. ஆகவே அந்த பொசிஷன்தான் வந்திருக்கிறது. ஆகவே அரசாங்கம் நாட்டினுடைய, பிரஸ்ஸினுடைய, பப்ளிக்கினுடைய 'ரீ-ஆக்ஷன்களை' பார்த்து அதை வித்-டிரா பண்ணலாம், 'Nothing siands agains it'.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திரும்பப்பெறுவது என்பது ஒருவேளை மக்கள் விருப்பத்தின் அடிப்படையிலே அரசு ஏற்பது என்பது சிலநேரங்களில் இயல்பாகவும் ஆகிவிடலாம். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இது வழக்கு மன்றத்திற்குப் போயிருக்கிறது. சில இடங்களில் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. அவைகள் எல்லாம் சரியான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்கு முன்பு இதுபற்றி விவாதிப்பது என்பது சரியல்ல. ஆகவே அவர்கள் கறுப்பு அடையாளச் சின்னத்தை அணிந்து வந்திருக்கிறார்கள் என்பதை வைத்துக் கொண்டு, சபாநாயகர் கவனித்தாரா இல்லையா என்பதை பிரச்சினையாக்கி இதைக் குறிப்பேட்டிலே ஏற்றுவது நியாயமல்ல என்பதுதான் என்னுடைய கோரிக்கையாகும்.

திரு. என். வி. என். சோமு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதம் 3-ஆம் தேதியன்று ஒரு பத்திரிகை கூட அகில இந்திய அளவிலே வெளிவரவில்லை, (குறுக்கீடு) 'அண்ணா'' பத்திரிகை வந்திருக்கலாம்.

மாண்புமிகு திரு. எம். ஜி இராமச்சந்திரன்: பேரவைக் தலைவர் அவர்களே, ஏதோ பத்திரிகை வெளிவந்திருந்கிறது.

திரு. என். வி. என். சோமு: பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு எழுந்திருக்கின்ற புதிய சூழ்நிலையில் பெரும்பாலான பத்திரிகைகள் 100-க்கு 99 சதவிகிதம் பத்திரிகைகள் அன்றைய தினம் வெளிவரவில்லை. இப்படிப்பட்ட புதிய சூழ்நிலை எழுந்திருப்பதால், இந்த நேரத்திலேயாவது பத்திரிகைகளின் உணர்ச்சிகளை மதித்துத் தாங்களாவது விசாரித்திருக்கலாம்.

Pen is mightier than sword

அதைத் தாங்கள் மனதில் கொண்டிருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் நான் விசாரிக்கின்ற வேலை என்பது இல்லை. அவரவர்கள் ஒரு கருத்தைக் கொண் டிருக்கிறார்கள். அவரவர்களுடைய எண்ணத்தைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதை விசாரிக்க வேண்டிய வேலை கிடையாது. ஏற்கனவே இந்த மன்றத்தில் இந்த மசோதா விற்காகச் சில நாட்களேகூட விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் பட்டு ஏராளமாக விவாதிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பேடுகளைப் பார்த்தால் இது தெரியும். மாண்புமிகு உறுப்பினர்கள் கவனப் படுத்திப் பார்த்தாலும் இது தெரியும். ஆகவே சட்டமாக்கப் பட்டு விட்டது. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்ன தைப் போல இது வழக்குமன்றத்தில் இருக்கின்ற விவகாரம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வாபஸ் பெறுவதில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லாமல் ஜனங்கள் கேட்டால் வித்ட்ரா செய்கிறோம். ஆனால் சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிறது என்ற காரணத்தைக் காட்டுவது சரியாக இல்லை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவ ரவர்களே, சில நேரங்களில், சில பிரச்னைகளில் மக்களுடைய எண்ணத்திற்கு மதிப்பு கொடுப்பதென்பதுபற்றிக் குறிப்பிட்டேனே தவிர, இந்தப் பிரச்னையில் நாங்கள் வாபஸ் வாங்குவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று குறிப்பிடவில்லை.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, வழக்குமன்றத்தில் இருப்பதாகக் காரணங் காட்டி வாபஸ் வாங்கக்கூடாது என்று சொல்வது சரியல்ல,

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவரவர்களே, சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிற கேஸை அரசாங்கம் வித்ட்ரா செய்வது என்றால் செய்யலாம்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, இது சம்பந்தமான நட வடிக்கைகள் அவைக்குறிப்பிலே இருக்கக்கூடாது என்பதுமாதிரி முதலமைச்சரவர்கள் சொல்கிறார்கள். அது சரியல்ல. இந்த

விஷயத்திலே நாங்கள் உள்ளேபோய் விவாதிக்கவில்லை. எனவே, இதுவரைக்கும் இதுகுறித்துப் பேசியது அவைக் குறிப்பில் இருக்க வேண்டும், அவைகளை நீக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, ஒரே ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசியிருக்கிறார்கள். உங்களுடைய கருத்தை அவர்களிடத்தில் சொல்லிப் பேசச் சொல்லியிருக்கலாம்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சுப்ரீம் கோர்ட்டிலே வழக்கு இருக்கிறது என்பது ஒரு காரணம் ஆகாது. முதலமைச்சரவர்களுக்கு உங்கள் மூலமாக நினைவுபடுத்த விரும்புகிறேன். கோர்ட்டிலே இருக்கும் கேஸை அரசாங்கம் நினைத்தால் வாபஸ் வாங்க முடியும். நாராயணசாமி நாயுடு மீது இருந்த கொலை முயற்சி வழக்கு வாபஸ வாங்கப்பட்டிருக்கிறது. அண்ணா சதுக்கத்திற்கு முன்னாலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினரவர்கள் விவாதத்தை ஆரம்பித்து விடுகிறார்கள். முதலமைச்சரவர்களைத் தனியாகப் பார்க்கும்பொழுது இதுபற்றி அவர்களிடத்தில் உறுப்பினரவர்கள் பேசலாம். இப்பொழுது இந்தப் பிரச்னை இத்துடன் முடிவடைகிறது. சொல்ல வேண்டிய அளவிற்குச் சொல்லியாகிவிட்டது.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) எதிர்பாராச்செலவு நிதி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ''தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (மூன்றாவது திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை நான் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன். நம்முடைய நிதியமைச்சர் நாவலர் அவர்கள், ''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவை'' இங்கே அறிமுகம் செய்திருக்கிறார்கள். இதற்கு நான் எதிர்ப்பு தெரிவிப்பதற்கு அடிப்படைக் காரணம் என்னவென்றால், ஏற்கனவே தமிழ்நாடு அரசினுடைய எதிர்பாராச் செலவுக்காக 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-20)

ஆனால் இந்த 50 கோடி ரூபாயை இப்போது 100 கோடியாக உயர்த்த நீங்கள் அனுமதி கோரியிருக்கிறீர்கள். நான் இங்கே சொல்ல விரும்புவது, எதற்காக இந்த 50 கோடி ரூபாயை

TRUTH ALONE TRIUMPHS